
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 222 | 4 Pages | 10.3.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 222 | 4 பக்கங்கள் | 10.3.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அருவிளிந் தற்று**

**விளக்கம்:**
**பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது, அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.**

# காங்கிரஸ் கட்சிக்குள் சிலர் பாஜகவிற்கு வேலை பார்க்கிறார்கள்: ராகுல் காந்தி



அகமதாபாத், மார்ச். 10

குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் கட்சித் தொண்டர்களிடையே காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி கூறியதாவது: குஜராத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை காங்கிரஸ் கட்சியால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை? இதன் பதில் என்னவென்றால், கட்சிக்குள் இருவகையான தலைவர்கள் இருக்கின்றனர். ஒன்று, பொதுமக்களுடன் நின்று அவர்களுக்காக போராடுபவர்கள்.

மற்றொன்று, மக்களை மதிக்காமல் பாஜகவுடன் இணைந்து செயல்படுகிறவர்கள். கட்சியின் இந்த இரு குழுக்களையும் பிரிப்பதுதான் எனதுவேலை.இருபதோமுப்பதோஇருந்தாலும்பரவாயில்லை;அவர்களைக் கண்டிப்பாக வெளியேற்றுவோம். இதனைச் செய்வதன் மூலம் குஜராத் மக்களுக்கு காங்கிரஸ் மீதான நம்பிக்கையும் கூடும்.கட்சிக்குள் இருந்தாவாறு பாஜகவுக்கு வேலை செய்தால், கண்டிப்பாக அந்தக் கட்சிக்கே அனுப்பப்படுவீர்கள். ஆனால், அந்தக் கட்சியில் உங்களை ஒரு பொருட்டாகக்கூட எடுத்துக் கொள்ள மாட்டார்கள்" என்றார்.

ராகுல் காந்தியின் இந்த பேச்சை பாஜக விமர்சித்துள்ளார். பாஜக இது தொடர்பாக கூறுகையில், குஜராத்தில் காங்கிரஸ் கட்சியால் வெற்றி பெற முடியவில்லை என்பதை ராகுல் காந்தி ஒப்புக்கொண்டுள்ளார்" என்று சாடியுள்ளது.

# முகத்தில் அதிக முடிகள்..! கின்னஸ் சாதனை படைத்த இந்திய இளைஞர்



போபால், மார்ச்.10

மத்தியப்பிரதேசமாநிலத்தைச் சேர்ந்தவர் லலித் பட்டிடார் (வயது 18), இவருக்கு ஏற்பட்டுள்ள 'வேர்வுல்ஃப் சிண்ட்ரோம்' என்றழைக்கப்படும் ஹைப்பர்ட்ரைக்கோஸிஸ் எனும் மரபணு மாற்றத்தினால் அவரது முகம் முழுவதும் நீளமானமுடிகள்வளர்ந்துள்ளது. இதனால், குழந்தைப் பருவம் முதல் பல்வேறு வகையான சோதனைகளுக்கு அவர் ஆளாக்கப்பட்டாலும், அவர் மனம் தளராமல் தனது அன்றாட வாழ்க்கையை பதிவு செய்து தனது யூட்டியூப் சேனலில் பதிவிட்டு வருகிறார்.

இந்த நிலையில், சமீபத்தில் அவர் இத்தாலி நாட்டின் மிலான் நகரத்தில் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டார். அப்போது, மருத்துவ நிபுணர்கள் அவரது முகத்தின் சிறிய பகுதியிலுள்ள முடிக்களை சவரம் செய்து எண்ணி ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் அவரது முகத்தின் ஒருசதுரசெண்டிமீட்டர்அளவில்201.72முடிகள்இருப்பதுகண்டறியப்பட்டது.

இதன் மூலம், முகத்தில் அதிக முடிகள் கொண்ட நபர் என்ற கின்னஸ் சாதனையை அவர் படைத்துள்ளார். தனது சாதனை குறித்து அவர் கூறுகையில், இந்த அங்கீகாரத்தினால் தான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 'வேர்வுல்ப் சிண்ட்ரோம்' என அறியப்பட்டு வரும் இந்த மரபனு மாற்றமானது தற்போது வரை உலகளவில் 50 பேரிடம் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தங்ககடத்தல் வழக்கில் கைது: ஜெயிலுக்குள் தூக்கமின்றி தவிக்கும் நடிகை ரன்யாராவ்



பெங்களூரு, மார்ச். 10

தங்ககடத்தல் வழக்கில் கைதான நடிகை ரன்யாராவ். கர்நாடக வீட்டுவசதித்துறை இயக்குனரான டி.ஜி.பி. ராமசந்திரா ராவின் வளர்ப்புமகள்ஆவார்.போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் அடிக்கடி வெளிநாடுகளுக்கு செல்லும் இவர் டி.ஜி.பியின் மகள் என்பதால் சோதனை நடத்தப்படாமல் வி.ஐ.பி.க்கள் செல்லும் வழியில் சென்றது தெரியவந்தது. மேலும் இவர் கடந்த 1½ ஆண்டுகளாக இந்த தங்க கடத்தலில் ஈடுபட்டு வந்தது தெரிய வந்தது. இதற்காக அவர் லட்சக்கணக்கில் சம்பளமாக பெற்றதும் கண்டு பிடிக்கப்பட்டது.இந்த நிலையில் கோ ர்ட்டில் ஆஜர்படுத்தப் பட்ட நடிகை ரன்யாராவ் பெங்க ளூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் 14 நாள் சிறையில் அடைக்கப் பட்டார்.

நடிகை ரன்யாராவ் ஜாமீன் கேட்டு பெங்களூரு பெருளாதார குற்றவியல் கோர்ட்டில் மனுதாக்கல் செய்தார். அதே போல் அவரை காவலில் எடுத்து விசாரணை நடத்த அனுமதி கேட்டு வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளும் மனுதாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடந்தது. இதில் நடிகை ரன்யாராவ் நேரில் ஆஜர்படுத்த ப்பட்டார். அப்போது நடிகை ரன்யாராவிடம் 3 நாட்கள் விசாரணை நடத்த வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கினார். மேலும் நடிகை ரன்யாராவின் ஜாமீன் மனு மீதான விசாரணையை வருகிற 10ந் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். இதையடுத்து நடிகை ரன்யாராவை போலீசார் விசாரணைக்காக அழைத்து சென்றனர்.

அப்போது நடிகை ரன்யா ராவ் தங்க கடத்தல் வழக்கில் தன்னை மிரட்டிய அரசியல் பிரமுகர்கள் பற்றி கூறியதாக தெரிகிறது. மேலும் அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பிரபல நகை கடை உரிமையாளர்களிடம் வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் அளித்த பதிலை வாக்குமூலமாக பதிவு செய்தனர். மேலும் தேவைப்படும் போது மீண்டும் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையே நடிகை ரன்யாராவ் முகம் சோர்வாகவும், கண்கள் வீங்கியும் காணப்படுகிறது. தங்க கடத்தல் வழக்கில் தான் கைதானதால் அவர் சிறையில் சரியாக சாப்பிடாமல், தூங்காமல் அமைதியை இழந்து விட்டதால் கண்கள் வீங்கி விட்டதாக கூறப்படுகிறது.

# தொகுதி மறுசீரமைப்பு, இந்தி திணிப்பு கண்டித்து வரும் 12ம் தேதி திமுக சார்பில் பொதுக்கூட்டங்கள்

## திருவள்ளூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு

சென்னை, மார்ச். 10

திமுக சார்பில் தொகுதி மறுசீரமைப்பு, இந்தி திணிப்பை கண்டித்து தமிழகம் முழுவதும் வரும் 12ம் தேதி கண்டன பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது. திமுக தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் கடந்த மார்ச் 5ம் தேதி நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ் நாட்டு அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் மோடி அரசின் அநீதியை மக்களிடம் கொண்டு சென்று, அதன் பேராபத்தை எடுத்து கூற வேண்டும் என்றும், தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்பட போகும் மாநிலங்களை ஒன்றிணைத்து ‘கூட்டு நடவடிக்கை குழு”வை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி 7 மாநிலங்களை சேர்ந்த 29 கட்சிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக தி.மு.க. சார்பில் வரும் 12ம் தேதி “தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்” ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டங்கள் மாவட்ட கழகங்கள் சார்பில் நடைபெற உள்ளது.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்து நம்மை இரண்டாந்தர குடிமக்களாக்க நினைக்கும் மோடி அரசின் சதியை மக்களிடம் எடுத்து கூறும் விதமாகவும், மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தி திணிப்பை மேற்கொள்வதை மக்களிடம்புரியவைக்கும்விதமாகவும்,




மாவட்ட செயலாளர்கள் தலைமையிலும், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் முன்னிலையிலும் நடைபெறும் விழிப்புணர்வு பொதுக்கூட்டங்களில் மாவட்டம், மாநகரம், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்புற நடத்திட வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக திருவள்ளூரில் நடைபெறும் கண்டன பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று பேசுகிறார்.

குடியாத்தத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளரும், அமைச்சருமான துரை முருகன் பங்கேற்கிறார். திருச்சி பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு, திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி ஆகியோர் பங்கேற்கின்றனர். மேலும் மாவட்டங்களில் நடைபெறும் கண்டன பொதுக்கூட்டங்களில் பங்கேற்க உள்ளவர்கள் பட்டியலையும் திமுக தலைமை கழகம் அறிவித்துள்ளது.

# மதுரை மாநகர் காமராஜர் சாலையில் உள்ள ஜெயன் மருத்துவமனையில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு இலவச ஆலோசனைகள் மற்றும் சிறப்பு சிகிச்சை தொகுப்பு முகாம்

மதுரை மாநகர் காமராஜர் சாலையில் உள்ள ஜெயன் மருத்துவமனையில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டுஇலவசஆலோசனைகள் மற்றும் சிறப்பு சிகிச்சை தொகுப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் டாக்டர் லக்ஷ்மி கணேஷ் M.S,DGO. குழந்தையின்மை சிறப்பு மற்றும் பெண்கள் நல அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர். மற்றும்டாக்டர்அமுதாDDVLதோல் நோய் சிறப்பு மருத்துவர், டாக்டர் கணபதி ராமன்D.N.B. குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் , டாக்டர் சரவணா மாதவ் M.D.,DTCD. நுரையீரல் சிறப்பு பொது நல மருத்துவர் , டாக்டர் இந்துஜா M.S,MCh சிறுநீரக சிறப்பு மருத்துவர் ஆகிய மருத்துவர்கள் இந்த இலவச முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனைகளும் வழங்கினார்கள். இந்த முகாமினை டாக்டர் ஜெயன் நிர்வாக இயக்குனரும் ஜெயன் மருத்துவமனையின் உரிமையாளருமான அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தார்.



# தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் சார்பாக, தென்காசி தலைமை மருத்துவமனையில் மகளிர் தின விழா

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் சார்பாக, தென்காசி தலைமை மருத்துவமனையில் மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது.

தென்காசி மாவட்ட தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்க தலைவரும் ,மாநில செயலாளருமான மருத்துவர் ஜெஸ்லின் தலைமை தாங்கி சர்வதேச மகளிர் தின சிறப்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி பொது மருத்துவத்துறை பேராசிரியரும் ,திருநெல்வேலி மாவட்ட அரசு டாக்டர்கள் சங்க தலைவருமான மரு. முகமது ரஃபி ,மற்றும் தென்காசி மாவட்ட இணை இயக்குனர் நலப்பணிகள் மரு .பிரேமலதா இருவரும் கலந்து மகளிர் தின சிறப்புரை ஆற்றினார்கள்.

பணி ஓய்வு பெற்ற மூத்த மருத்துவர்கள் அப்துல் அஜீஸ், பாலா சிங், வசந்தா, வேதமூர்த்தி, மகேஸ்வரி, சுப்பிரமணி, முகைதீன், முத்தையா, லதா ஆகியோர் நிகழ்ச்சியில் ஆர்வமுடன் கலந்து கௌரவிக்கப்பட்டனர்.

திருநெல்வேலி மாவட்ட அரசு டாக்டர் சங்க மாவட்டச் செயலாளர் உதவி பேராசிரியர் மரு.சிவ சுப்ரமணியன் நிகழ்ச்சியில் கலந்து அனைத்து அரசு மகளிர் மருத்துவர்களுக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டார்.







அரசு பெண் மருத்துவர்களுக்கான கருத்தரங்கம் மற்றும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய அனைத்து மருத்துவர்களும் கௌரவிக்கப்பட்டு கேடயம் வழங்கப்பட்டது.

பங்கு பெற்ற அனைவருக்கும் தமிழ் தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் சார்பாக சுவையான சைவ மற்றும் அசைவ உணவுகள் பரிமாறப்பட்டன.

விழா ஏற்பாடுகளை அரசு டாக்டர்கள் சங்க தென்காசி மாவட்ட தலைவர் ஜெஸ்லின் தலைமையில் மாவட்டச் செயலாளர் செந்தில் சேகர் மற்றும் முகமது இப்ராஹிம் ,பொருளாளர் ராஜேஷ் கண்ணா, துணைத் தலைவர்கள் ராஜலட்சுமி, கார்த்திக் அறிவுடை நம்பி ,இணைச் செயலாளர்கள் திருமலை குமார், ராஜ்குமார் அனைவரும் சேர்ந்து செய்திருந்தனர்.

விழாவில் மருத்துவர் அனிதா பாலின், கீதா, வேலம்மாள் ,செல்வ பாலா, புனிதவதி ,சொர்ணலதா, சங்கரி, தேவி கற்பூரநாயகி, ராஜலட்சுமி, மணிமாலா, மாரீஸ்வரி, சுந்தராம்பாள், மோஹினா, மகேஸ்வரி, ராதிகா, வினோதினி, அனு கிருத்திகா, தமிழருவி, முத்துலட்சுமி வட்டார மருத்துவர்கள் பழனிக் குமார், ஆறுமுகம் , திருமலை, தமிழ்ச்செல்வி, மகாலட்சுமி , மூத்த மருத்துவர்கள் ராஜேஷ், மில்லர், விக்னேஷ், முத்துராமன் என மாவட்டத்திலுள்ள 200க்கும் மேற்பட்ட அரசு மருத்துவர்களும் இன்று மகளிர் தின விழாவில் கலந்து கொண்டாடினர். இவ்விழாவில் மாவட்ட செயலாளர் மரு.செந்தில் சேகர் அவர்களும் மாவட்ட செயலாளர் (DPH) மரு.முகமது இப்ராகிம் அவர்களும் கலந்து கொண்டு நன்றி தெரிவித்தனர்.

# முதல்வர் மருந்தகத்தில் மாத்திரை விலை அதிகம் என்பது வதந்தி : தமிழக அரசின் உண்மை சரிபார்ப்பகம் விளக்கம்

சென்னை, மார்ச்.10

முதல்வர் மருந்தகத்தில் மாத்திரை விலை அதிகம் என்று வதந்தி பரப்பப்பட்டு வருகிறது என்று தமிழக அரசின் உண்மை சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது.

சர்க்கரை நோய்க்கான வில்டாகிளிப்டின் மெட்பார்மின் ஹைட்ரோ குளோரைடு மாத்திரை(15) பிரதமரின் மக்கள் மருந்தகத்தில் ரூ.30க்கும், முதல்வர் மருந்தகத்தில் ரூ.35க்கும் விற்கப்படுவதாக இரு மாத்திரை அட்டைகளுடன் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகிறது.




வில்டாகிளிப்டின் மெட்பார்மின் ஹைட்ரோ குளோரைடு மாத்திரை(15) அட்டையில் விலை ரூ.36 என்றுள்ளது. ஆனால், முதல்வர் மருந்தகத்தில் ரூ.9 தள்ளுபடி(25%) போக 15 மாத்திரைகள் கொண்ட ஒரு அட்டை ரூ.27க்கே விற்பனையாகிறது. மாத்திரை அட்டையில் உள்ள விலையை மட்டும் வைத்து முதல்வர் மருந்தகத்தில் விலை அதிகமாக உள்ளதாகத் திரித்து வதந்தியைப் பரப்பி வருகின்றனர்.

# தஞ்சை அருகே ஜல்லிக்கட்டு 400 வீரர்கள் மல்லுக்கட்டு

தஞ்சை, மார்ச்.10

தஞ்சை அருகே இன்று நடந்த ஜல்லிக்கட்டில் 600 காளைகள் சீறிப்பாய்ந்தன. 400 வீரர்கள் போட்டி போட்டு காளைகளை அடக்கினர்.

தஞ்சை அருகே திருக்கானூர்பட்டியில் புனித அந்தோணியார் ஆலய பொங்கலை முன்னிட்டு ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி மாதா கோவில் தெருவில் அமைக்கப்பட்டிருந்த வாடிவாசலில் இன்று நடந்தது.



இதில் தஞ்சை, மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட 600 காளைகள் அழைத்து வரப்பட்டன. 400 வீரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு பின் அனுமதிக்கப்பட்டனர்.


காலை 6.40 மணிக்கு ஜல்லிக்கட்டு போட்டியை ஆர்டிஓ இலக்கியா, வல்லம் டிஎஸ்பி கணேஷ்குமார் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். முதலில் கோயில் காளைகள் வாடிவாசல் வழியாக அவிழ்த்து விடப்பட்டன. அதன் பின் மற்ற காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்துவிடப்பட்டது. சீறிப்பாய்ந்து வந்த காளைகளை வீரர்கள் போட்டி போட்டு அடக்கினர்.

காளைகளை அடக்கி வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க காசு, எவர்சில்வர் அண்டா, கட்டில், சைக்கிள், டிரஸ்சிங் டேபிள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டன. இதேபோல அடக்க முடியாத காளைகளின் உரிமையாளர்களுக்கும் ரொக்கப்பரிசு மற்றும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. போட்டியை காண தஞ்சை மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பொது மக்கள் குவிந்தனர்.

# 28 நாள் அம்மன் பச்சை பட்டினிவிரதம்; சமயபுரம் மாரியம்மன் கோயிலில் பூச்சொரிதல் விழா துவக்கம்

திருச்சி, மார்ச்.10

சக்தி தலங்களில் பிரசித்தி பெற்ற திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் பூச்சொரிதல் விழா விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான பூச்சொரிதல் விழா முதல் ஞாயிற்றுக்கிழமையான நாளை(9ம் தேதி) துவங்குகிறது. இதையொட்டி, அதிகாலை விக்னேஷ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம் முடிந்து காலை 7.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் மீன லக்னத்தில் அம்மனுக்கு காப்பு கட்டப்படுகிறது. தொடர்ந்து பூச்சொரிதல் விழா நடக்கிறது.



மும்மூர்த்திகளை நோக்கி மாயசூரனை வதம் செய்த பாவம் நீங்கவும், உலக நன்மைக்காகவும், தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு எல்லாவிதமான நோய்களும், தீவினைகளும் அணுகாது, சகல சவுபாக்கியங்களும் கிடைக்க இங்கு அம்மனே பக்தர்களுக்காக 28 நாட்கள் பச்சை பட்டினி விரதம் இருப்பது சிறப்பாகும். மாசிமாதகடைசிஞாயிறு முதல், பங்குனி மாத கடைசி ஞாயிறு வரை அம்மன் விரதம் இருப்பார்.

இந்த 28 நாட்களும் அம்மனுக்கு தளிகை, நைவேத்தியம் கிடையாது. துள்ளுமாவு, நீர் மோர், கரும்பு, பானகம் மற்றும் இளநீர் மட்டுமே நைவேத்தியமாக படைக்கப்படுகிறது.

# தொகுதி மறு சீரமைப்பு விவகாரத்தில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து தேமுதிக எதிர்ப்பு தெரிவிக்கும்

சென்னை, மார்ச்.10

தேமுதிக சார்பில் கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் மகளிர் தின விழா நேற்று நடந்தது. விழாவிற்கு தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தலைமை தாங்கினார். விழாவில் பங்கேற்ற மகளிர் அணியினர் பிரேமலதாவுக்கு ஆளுயுர மாலை அணிவித்தனர். பிரேமலதா கேக் வெட்டி மகளிர் அணிக்கு மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். பின்னர் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினருக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பிரேமலதா அளித்த பேட்டி: மகளிர் தினமான இன்று கேப்டனின் லட்சியம், கொள்கைகளை அனைவரும் வென்றெடுப்பதற்கு நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். தமிழக அரசு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மும்மொழி கொள்கை தொடர்பாக எங்களது கருத்துகளை ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

அன்னை மொழியை காப்போம். அனைத்து மொழிகளையும் கற்போம் என்கிற கேப்டன் வாக்கின்படி தேமுதிக செயல்படும். தொகுதி மறு சீரமைப்பு விவகாரத்தில் ஒன்றிய அரசு தமிழகத்தில் தொகுதிகளை குறைக்க கூடாது. இதற்காக தேமுதிக தமிழக அரசுடன் இணைந்து எதிர்ப்பை தெரிவிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



★ ராஜ்யசபா சீட் உண்டா? பிரேமலதா பெரிய கும்பிடு

அதிமுக அணியில் தேமுதிகவுக்கு ஒரு ராஜ்ய சபா சீட் கிடைக்கும் என பிரேமலதா கூறிவந்தார். ஆனால் சமீபத்தில் பேட்டியளித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ‘அப்படி எந்த உறுதிமொழியும் கொடுக்கவில்லை’ என அதிரடியாக கூறிவிட்டார். இந்த நிலையில் பிரேமலதா நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது அவரிடம் ராஜ்யசபா சீட் பற்றி நிருபர்கள் கேட்டனர். ஆனால் பிரேமலதா அதற்கு பதிலளிக்காமல், எழுந்து நின்று பெரிதாக கும்பிடு ஒன்றை போட்டு விட்டு கிளம்பிவிட்டார்.

# மகளிர் தின ஸ்பெஷல் 950 பெண் போலீசுக்கு ஒரு நாள் விடுப்பு

மதுரை, மார்ச்.10

உலகம் முழுவதிலும் மகளிர் தினம் நேற்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது. மதுரை மாநகர சரக காவல்துறையின் சார்பில் நேற்று பல்வேறு விழிப்புணர்வு மற்றும் கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்கள், ஆயுதப்படைப்பிரிவு, சைபர் க்ரைம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் பல்வேறு பிரிவுகளின் கீழ் பணிபுரியும் 950 மகளிர் போலீசாருக்கு நேற்று ஒரு நாள் முழுவதிலும் விடுப்பு வழங்கி மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் லோகநாதன் உத்தரவிட்டார்.

இதன் காரணமாக பெண் போலீஸ் அதிகாரிகள் மற்றும் அனைத்து பெண் போலீசாரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

# மின் கம்பி அறுந்ததால் நடுவழியில் நின்ற எக்ஸ்பிரஸ் ரயில்

ஜோலார்பேட்டை, மார்ச்10

மேற்கு வங்க மாநிலம் ஹவுராவிலிருந்து, கர்நாடக மாநிலம் பெங்களூரு வரை செல்லும் ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் ரயில் நிலையத்தில் உள்ள யார்டை கடந்து சென்று கொண்டிருந்தது. அப்போது ரயில் இன்ஜின் மேலே உள்ள மின் ராடு உடைந்து, ரயில் இன்ஜினை இயக்கும் 25 ஆயிரம் வோல்ட் உயரழுத்த மின் கம்பியியும் அறுந்து விழுந்தது.

இதன்காரணமாக ரயில் இன்ஜினுக்கு மின்சாரம் கிடைக்காமல் ரயில் நடுவழியில் நின்றது. இதுகுறித்து இன்ஜின் டிரைவர் தகவலின்படி ரயில்வே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ரயில் இன்ஜின் மேலேஉடைந்துவிழுந்த ராடையும், இதனால் அறுந்து விழுந்த உயரழுத்த மின்கம்பியையும் சுமார் ஒரு மணி நேரம் போராடி சீரமைத்தனர். அதன் பிறகு ரயில் மீண்டும் பெங்களூரு புறப்பட்டது.

இதனால் ரயில் பயணிகள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் அவதிக்குள்ளாகினர்.

# மேகதாது அணை விவகாரம் கர்நாடகத்தில் தமிழ் சினிமா ஓடாது: வாட்டாள் நாகராஜ் மிரட்டல்

ஒசூர்: மார்ச். 10

கன்னட சலுவளி வாட்டாள்கட்சியின்தலைவர் வாட்டாள் நாகராஜ் அத்திப்பள்ளி பகுதியில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: முதல்வர் மு.க.ஸ்டாலின் மட்டுமல்ல, தமிழக தலைவர்கள் அனைவரும் மேகதாதுவுக்கு எதிராக இருக்கிறார்கள். மேகதாதுவில் அணை கட்ட எவ்வித ஆட்சேபனையும் இல்லை என, தமிழக அரசு ஒரு மாதத்திற்குள் தெரிவிக்காவிட்டால், முதல் போராட்டமாக கர்நாடகாவில் தமிழ் சினிமாக்களை ஓட விட மாட்டோம். காவிரி நீர் கடலில் கலப்பதை தடுக்கவே, நாங்கள் மேகதாது பகுதியில் அணை கட்டுகிறோம்.



காவிரி, மேகதாது, மாதாயி உள்ளிட்ட அணைகளுக்காக தமிழக, மகாராஷ்டிரா மாநிலங்களை கண்டித்து, மாநிலம் தழுவிய போராட்டம் நடக்கும். தொகுதி மறுசீரமைப்பில் தொகுதிகளின் எண்ணிக்கையும் குறையாது. அப்படி குறைந்தால் ஒன்றிய அரசிற்கு எதிராக நாங்களும் போராடுவோம். தமிழகத்தில் நடக்கும் இந்தி போராட்டத்தை விட, கர்நாடகா மாநிலத்தில் இந்திக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்களை நடத்தி வருகிறோம். இந்தி மொழியை அனுமதிக்க மாட்டோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தை பார்வையிட தடை

திருப்புவனம், மார்ச். 10

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் 7ம் கட்ட அகழாய்வு நடந்த இடம் திறந்தவெளி அருங்காட்சியகமாக செயல்பட்டு வருகிறது. திறந்த வெளி அருங்காட்சியகம் அருகிலேயே 1 மற்றும்

2, 3, 6, 8ம் கட்ட அகழாய்வுகள் நடந்த தளங்களை அருங்காட்சியகமாக மாற்றும் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜன.23ம் தேதி துவக்கி வைத்தார்.

தொடர்ந்து நான்கரை ஏக்கர் பரப்பளவில் ரூ.15 கோடியே 69 லட்சத்தில் நவீன அம்சங்களுடன் உலக தரத்தில் திறந்த வெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இதனிடையே பார்வையாளர்கள் வருகையால் இப்பணிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. எனவே பணிகள் முடிவடையும் வரை திறந்த வெளி அருங்காட்சியகத்தை பார்வையிட இன்று முதல் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தொல்லியல் துறை அறிவித்தது.

# ஆண், பெண் பாகுபாடு பார்த்து இஸ்ரோவில் வாய்ப்பு மறுப்பா? தலைவர் நாராயணன் பதில்

கன்னியாகுமரி, மார்ச். 10

கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திராவில் நேற்று ஒய்வு பெற்ற பாலிடெக்னிக் ஆசிரியர்கள் கூட்டமைப்பின் 10ம் ஆண்டு விழா நடந்தது. விழாவில் இஸ்ரோ தலைவர் நாராயணன் கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது: அனைவருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துகள். ஒரு சமுதாயம், நாடு, குடும்பம் முன்னேற வேண்டும் என்றால் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம பங்கு, சம உரிமை வேண்டும்.



இஸ்ரோவில் ஆண், பெண் என பிரித்து பார்க்கப்படுவதில்லை. தகுதியான மற்றும் திறமையானவர்களுக்கு வாய்ப்பு, முன்னுரிமை வழங்கப்படுகிறது. சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட ஆதித்யா எல்1 திட்டத்தின் இயக்குனர் நிகார் சாஜ் ஒரு பெண் ஆவார். மேலும் சந்திரயான் 2 இயக்குனராக வனிதா என்பவர் பணியாற்றினார். சந்திரயான் 3 திட்டத்தில் இருந்தவர்கள் 50 சதவீதம் பேர் பெண்கள் ஆவர். இவ்வாறு அவர் கூறினார்.

★ ‘2028ல் சந்திரயான் 4 திட்டம்’

குமரி மாவட்டம் அஞ்சுகிராமம் அருகே ரோகிணி கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் இஸ்ரோ தலைவர் நாராயணன் கலந்து கொண்டார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறுகையில், ‘சந்திரயான் 4 நிலவில் தரையிறங்கி அங்கிருந்து மண் மாதிரிகளை எடுத்து பூமிக்கு கொண்டு வரும் ஒரு திட்டம். அதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அது வரும் 2028ல் நடைபெறும். ஆழ் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு எந்த இடத்தில் அதிக மீன் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளும் விதமாக விண்வெளியில் அதற்கான செயலிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு ஆண்டுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் லாபம் வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி வரவேற்பு பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்களை முதல்வர் நடைமுறை

சென்னை, மார்ச். 10

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் நேற்று வெளியிட்ட அறிக்கை: உலகம் முழுவதும் மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் அனைத்து மகளிருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் திராவிட இயக்கங்களும், பெரியார், கலைஞர் போன்றவர்களும் எடுத்த கடும் நடவடிக்கைகளின் விளைவாக இன்றைக்கு பெண்கள் ஆண்களுக்கு சமமாக அல்லது ஆண்களை மிஞ்சக்கூடிய அளவிற்கு உயர்ந்து நிற்கிறார்கள்.

பெண்களுக்கு சொத்தில் பங்கு என்ற மகத்தான சட்டத்தை இயற்றிய வரலாற்று பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு. பெண்கள் சுயமாக தங்கள் காலில் நின்றிட சுய உதவி குழுக்களை அறிமுகப்படுத்திய பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு. இன்று பெண்களை அனைத்து நிலையிலும் முன்னேற்றுவதற்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எண்ணற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது அறிந்ததே.



இலவச பேருந்து திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டம், உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை, என இந்த திராவிட மாடல் ஆட்சி எடுத்து வரும் நடவடிக்கையால் இன்றைக்கு தமிழ்நாட்டுப் மகளிருக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றனர். குறிப்பாக கட்டுமான தொழிலில் ஈடுபடக்கூடிய பெண்களுக்கு உள்ளார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறது விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்த தமிழ்நாடு அரசு 50 சதவீத செலவை ஏற்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, மார்ச். 10

பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: கர்நாடக சட்டப் பேரவையில் அம்மாநிலத்தின் 202526ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசிய முதல்வர் சித்தராமய்யா, கர்நாடகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டங்களில் 9 திட்டங்களின் மதிப்பில் 50 சதவீதத்தை கர்நாடக மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்துள்ளார்.

மேலும், 7 திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தித் தருவதற்கான செலவு முழுவதையும் தமது அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் இன்றைய நிலையில், 10 புதிய ரயில் பாதை திட்டங்கள், 9 இரட்டைப் பாதைத் திட்டங்கள், 3 அகலப்பாதைத் திட்டங்கள் என மொத்தம் 22 திட்டங்கள் ரூ.33,467 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்காக கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ.7,154 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

எனினும், புதிய பாதைத் திட்டங்களில் வெறும் 2.75 சதவீத பணிகளும், இரட்டைப்பாதைத்திட்டங்களில் வெறும் 3.82 சதவீத பணிகளும் மட்டும் தான் இது வரை முடிவடைந்துள்ளன. எனவே, முதன்மையான ரயில்வேதிட்டங்களுக்கான செலவில் பாதியை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். அதன்மூலம் தமிழக ரயில்வே திட்டங்களை விரைவுப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்த பெண் அதிகாரிகள், போலீசாருக்கு பரிசு: மகளிர் தின விழாவில் கமிஷனர் அருண் வழங்கினார்

சென்னை, மார்ச். 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில், சென்னை பெருநகர காவல் சார்பில் மகளிர் தின விழாவை சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் தொடங்கி வைத்தார். முன்னதாக, புதுப்பேட்டை ஆயுதப் படை வளாகத்தில் சேதமடைந்த பெண் காவலர்களுக்கான தங்கும் விடுதி ரூ.36.64 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, ''பூவையர் புத்துணர்ச்சி சிற்றில்'' என பெயர் சூட்டப்பட்டு நவீன வசதிகளுடன்கூடிய பெண்காவலர்களுக்கான தங்கும் விடுதியை காவல் ஆணையர் அருண் திறந்து வைத்தார்.



30 படுக்கைகள் கொண்ட சாதாரண அறைகளும், 30 படுக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய அறைகளும், 22 குளியலறைகள் மற்றும் 25 ஒப்பனை அறைகளுடன், பாதுகாப்புக்காக சிசிடிவி கேமராக்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த விடுதியில் குறைந்த வாடகையில் பெண் காவலர்கள் தங்கலாம். புதிதாக பயிற்சி முடித்த மற்றும் சென்னைக்கு பணியிட மாறுதலில் வரும் பெண் காவலர்கள் அதிக பட்சமாக 45 நாட்கள் வரையில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் காவல்துறையில் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் போலீசாரின் சிறப்பான பணிகள் குறித்து குறும்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து காவல் ஆணையர் அருண் பேசுகையில், கடினமான காவல் துறையில் பெண் அதிகாரிகள் மற்றும் போலீசாரின் சிறப்பான பணிகள்குறித்துபாராட்டி பேசினார்.

தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமை செயலாளர்கள் சுப்ரியா சாஹு, அமுதா, காக்கர்லா உஷா, காவல்துறை இயக்குநர் உணவு பொருள் கடத்தல் குற்றப்புலனாய்வு துறை சீமா அகர்வால், இணை இயக்குநர், மத்திய புலனாய்வுத்துறை வித்யா ஜெயந்த் குல்கர்னி, சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் மனைவி யமுனாதேவி, சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சென்னை பெருநகர கூடுதல் காவல் ஆணையர்கள் கபில் குமார் சி சரத்கர் (தலைமையிடம்), கண்ணன் (தெற்கு), ராதிகா (மத்திய குற்றப்பிரிவு) மற்றும் அதிகாரிகள், காவலர்கள், காவல்துறை குடும்பத்தினர் என சுமார் 3,500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# உதவி கேட்ட தர்மபுரி மாணவியை படுக்கைக்கு அழைத்த பாஜ நிர்வாகி: பகிரங்க பேட்டியால் பரபரப்பு

தர்மபுரி, மார். 10

உதவி கேட்டு சந்தித்த போது, பாஜ நிர்வாகி படுக்கைக்கு அழைத்ததாக கல்லூரி மாணவி பரபரப்பு புகார் தெரிவித்துள்ளார். தவெக சார்பில், தர்மபுரியில் மகளிர் தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த 21 வயது மாணவி பங்கேற்று பேசினார். அப்போது, புராஜக்ட் தொடர்பாக ஏரியூர் பகுதியைச் சேர்ந்த பாஜ நிர்வாகியை சந்தித்து உதவி கேட்டபோது, தன்னை படுக்கைக்கு அழைத்ததாக மேடையிலேயே அவர் தெரிவித்தார்.

இதனால், நிகழ்ச்சியில் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: நான் டிப்ளமோ இஇஇ இறுதியாண்டு படித்து வருகிறேன். கொரோனா காலத்தில் ரூல் பென்சிலையும், நார்மல் வாட்டர் வைத்தும் ஆக்சிஜன் இன்வெட்டர் கண்டுபிடித்தேன். அதன் மூலம் ஏராளமானோருக்கு ஆக்சிஜன் வழங்கியிருக்கிறேன்.

அப்போது, என்னை யாருக்கும் தெரியாது. இப்போது தான் எல்லோருக்கும் ஆக்சிஜன் இன்வெட்டர் கண்டுபிடித்த பொண்ணு என்று தெரிகிறது.

தற்போது நான் செய்து கொண்டிருக்கும் புராஜக்ட் கம்பரஷர் வைத்து ஒரு ஆக்சிஜன் இன்வெட்டர் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அறிவியல் கண்காட்சியில் உலக அளவிலும், தேசிய அளவிலும் நான் தான் முதலிடம் பெற்றுள்ளேன். மேலும், உலக சாதனை படைத்துள்ளேன். 2023 2024ல் இளம் விஞ்ஞானியாக என்னை தேர்வு செய்து விருது வழங்கினர். தேசிய அளவிலான இறகுப்பந்து போட்டியில் பங்கேற்று விளையாடியுள்ளேன். இப்போது புதிதாக நிறைய புராஜக்ட் செய்து வருகிறேன். இதற்கு உதவி தேவையாக உள்ளது.

இவ்வளவு புராஜக்ட்ஸ் செய்து கொண்டிருக்கும்போதே எனக்கு தடைகள் வருகிறது. உதவிக்காக ஏரியூர் பகுதியைச் சேர்ந்த பாஜ நிர்வாகியை சந்திக்க சென்றபோது, என்னை எப்படி யூஸ் பண்ணிக்கலாம் என்று தான் பார்த்தாங்களே தவிர, நம்ம ஊரு பொண்ணு, நம்ம ஸ்டேட்டுக்கு ஒரு பெயர் வருமே என்றெல்லாம் அவர்கள் யோசிக்கவில்லை.

ஏரியூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பாஜ நிர்வாகியை, புராஜக்ட் தொடர்பாக நேரில் சந்தித்தபோது, தவறாக நடக்க முயன்றார். அவர் என்னை படுக்கைக்கு அழைத்தார். அதிலிருந்து உடனே வெளியே வந்துவிட்டேன். அவருடன் மாநில தலைவர் அண்ணமாலை சாரை சந்தித்துள்ளேன். அங்கிருந்து வந்தபிறகும் என்னை தவறாக பயன்படுத்திக்கொள்ள முயன்றார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# செந்தமிழ் நாட்டு தமிழச்சியே என்ற தலைப்பில் போட்டிகள்... செய்தி மக்கள் தொடர்புத்துறை அறிவிப்பு

சென்னை, மார்ச். 10

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் "செந்தமிழ் நாட்டு தமிழச்சியே" என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினின் தலைமையிலான நான்கு ஆண்டு கால ஆட்சியில் சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றை பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் வழங்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அதன்படி தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பெண்களுக்கான திட்டங்களைப் போற்றும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சமூக ஊடகமையம் சார்பில் "செந்தமிழ் நாட்டு தமிழச்சியே" என்ற தலைப்பில் பல்வேறு சமூக ஊடகங்களின் (X, Instagram, Facebook, WhatsApp, YouTube) வாயிலாக போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் நேரில் சந்தித்து பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி சிறப்பிக்கவுள்ளார். முதல் அமைச்சர், பெண்களுக்கான பல்வேறு மகத்தான நலத்திட்டங்கள் வாயிலாகத் தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்.

விடியல் பயணத் திட்டம் மூலம் அரசின் விடியல் பயண பேருந்துகளில் இது வரை 642 கோடியே 55 லட்சம் முறை மகளிர் கட்டணமில்லா விடியல் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் ஒவ்வொரு பெண் பயணியும் மாதம் சராசரியாக ரூ.888 வரை சேமிக்கின்றனர். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் 1 கோடியே 15 லட்சம் மகளிர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெண்களின் வாழ்க்கையை வளம் மிக்கதாக மாற்றியமைத்துள்ளது.

புதுமைப் பெண் திட்டத்தில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் தமிழ் வழிப் பள்ளிகளில் பயின்று, தடையின்றி உயர் கல்வி பயிலும் 4 லட்சத்து 97 ஆயிரத்து 525 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1,000 வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பெண்கள் நலத்திட்டங்களின் மூலமும், பெண்களைப் போற்றும் விதமாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சமூக ஊடகமையம் சார்பில் "செந்தமிழ் நாட்டு தமிழச்சியே" என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அதன்படி உங்கள் கருத்து மதிப்புமிக்கது (Your Voice Matters), Selfie with the Superwoman, ரீல்ஸ் போட்டி (Reels Competition), கட்டுரைப் போட்டி, வரைதல்/ ஓவியப்போட்டி (Painting/ Drawing Competition) ஆகிய 5 பிரிவுகளில் போட்டிகள் நடத்தபடவுள்ளது.

போட்டிகளும் அதன் விதிமுறைகளும் பின் வருமாறு:

1. உங்கள் கருத்து மதிப்பு மிக்கது (Your Voice Matters)

உங்களைப் பெரிதும் கவர்ந்த பெண்களுக்கான திட்டம் எது? உங்களது மதிப்புமிக்க கருத்துக்களைக் கீழ்க்காணும் linkஐ பயன்படுத்தி தெரிவிக்கவும்.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSc8HFOsugpYz8bL5D83v98PuCxahXTfNmk9pRnhgFZ2YPAQ/viewform?usp=sharing

2. சுயமிப் போட்டி (Selfie with the Superwoman)

போட்டியாளர்கள் தங்கள் வாழ்க்கையில் மிகுந்த ஊக்கம் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்திய பெண்கள் என்பதை விளக்கும் வகையில் ஒரு வாசகத்துடன் கூடிய சுயமியை(Selfie) தங்களின் சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து #செந்தமிழ்நாட்டு தமிழச்சியே #TNCelebratesHer மற்றும் #TNWomen என்ற ஹாஷ்டாக்குகளை பயன்படுத்தி @tndiprயை TAG செய்து பகிரவும்.

3. ரீல்ஸ் போட்டி (Reels Competition) முதல்அமைச்சர் வெளியிட்ட "செந்தமிழ் நாட்டு தமிழச்சியே" பாடலுக்கான தங்களின் ஹூக் ஸ்டெப்பை (Hook Step) உருவாக்கி, தங்களது சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து #செந்தமிழ்நாட்டுதமிழச்சியே #TNCelebratesHer மற்றும் #TNWomen என்ற ஹாஷ்டாக்குகளை பயன்படுத்தி @tndiprயை TAG செய்து பகிரவும். ரீல்ஸ் 1 நிமிடத்துக்குள் அமைய வேண்டும்.

வீடியோ மற்றும் ஆடியோ சரியான தரத்துடன் இருக்க வேண்டும். செந்தமிழ் நாட்டு தமிழச்சி பாடல் Link: https://www.youtube.com/watch?v=lfAPSkdp4GM

4. கட்டுரைப் போட்டி (Essay Competition)

1. மகளிர் மேம்பாட்டில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு ஏன் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது?

2. கடந்த 4 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பெண்கள் நலத் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் பற்றி

3. கடந்த 4 ஆண்டுகளில் பெண்கள் நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்கள் அவர்களின் வாழ்க்கை அல்லது அன்றாட வாழ்வாதாரத்தில் எவ்வாறு மாற்றம் அடைத்திருக்கிறீர்கள் என்பதைப் பற்றி

மூன்று தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 3 பக்க அளவில் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

கட்டுரைகளைத் எழுதி PDF கோப்பாக அனுப்ப வேண்டும்.

5. வரைதல் / ஓவியப் போட்டி (Painting/Drawing Competition) தலைப்பு : பெண்களைபோற்றுவோம்

பெண்களைக் கௌரவித்து கொண்டாடும் வகையில் வரைதல்/ஓவியங்கள் அமைதல் வேண்டும். ஓவியங்களைத் தெளிவான முறையில் புகைப்படம் எடுத்து அனுப்ப வேண்டும். மேற்கண்டவாறு நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும் போட்டியாளர்கள் தங்கள் படைப்புகளை tndiprmhiwd2025@gmail.com என்ற மின்னஞ்சலில் அனுப்பி வைக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஜ கூட்டணிக்காக அதிமுக தவம் கிடக்கிறது என்று அண்ணாமலை சொன்னதாக தவறான தகவல் பரப்புவதா? எடப்பாடி திடீர் பல்டி

சென்னை, மார்ச். 10

அதிமுக மகளிர் அணியின் சார்பில் நேற்று சென்னை, ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் 'சர்வதேச மகளிர் தினம்' கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்றார். இதில், தலைமை கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்பி, எம்எல்ஏக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முன்னாள் அதிமுக அமைச்சர்கள் வளர்மதி, கோகுல இந்திரா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த கேக்கை எடப்பாடி பழனிசாமி வெட்டி, அங்கு கூடி இருந்த மகளிர்களுக்கு வழங்கினார்.

இதனை தொடர்ந்து மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் எடப்பாடி பழனிசாமி



நிருபர்களிடம் கூறியதாவது: பெண் ஒருவர் முதலமைச்சராக அதிக ஆண்டுகள் ஆட்சி செய்த பெருமைக்கு உரியவர் ஜெயலலிதா. பெண்களுக்காக பல திட்டங்களை கொண்டு வந்தார். பெண் சிசு கொலையை தடுக்க தொட்டில் குழந்தை திட்டத்தை கொண்டு வந்தவர் ஜெயலலிதா. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தாலிக்கு தங்கம், மகளிருக்கு மானிய விலை ஸ்கூட்டர் திட்டம் கொண்டு வந்தார்.

பாஜவுடன் கூட்டணிக்காக அதிமுகவினர் தவம் கிடக்கிறார்கள் என்று அண்ணாமலை கூறி உள்ளாரே? எங்கேயாவது அதிமுக என்று குறிப்பிட்டு அவர் (அண்ணாமலை) பேசினாரா? தயவுசெய்து தவறாக பேசாதீர்கள். அதிமுக என்று எங்க, யார் சொன்னது? நீங்கள் (நிருபர்கள்) போட்டு கொடுத்து வாங்காதீங்க. நான் ஏற்கனவே தெளிவாக சொல்லி விட்டேன்.

இன்னும் 6 மாதம் கழித்து கூட்டணி குறித்து பேசப்படும் என்று தெளிவாக கூறி விட்டேன். பத்திரிகைகளிலும் இது செய்தியாக வந்துள்ளது. அதுதான் செய்தி.

இவ்வாறு அவர் கூறினார். கடந்த சில மாதங்களாக பாஜவுக்கு எதிராக எடப்பாடி பேசி வந்தார். இப்போது மவுனம் காக்கிறார். குறிப்பாக அண்ணாமலையை எதிர்த்து பேசுவதை தவிக்கிறார். பாஜ கூட்டணிக்காக அதிமுக தவம் கிடைக்கிறது என வெளிப்படையாக அண்ணாமலை பேசியது தெரிந்திருந்தும், அது குறித்து எதுவும் பேசாமல், எடப்பாடி பழனிசாமி, திடீரென பல்டி அடித்து பாஜவுக்கு ஆதரவாக பேசி உள்ளது குறிப்பிடத்தக்கது.

★ மகளிர் தினத்தையொட்டி எடப்பாடி வாழ்த்து

மகளிர் தினத்தையொட்டி எதிர்க்கட்சிதலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு: தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் மகளிர் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான சர்வதேச மகளிர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். 2026ல் மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும், இன்று நீங்கள் அச்சத்துடன் இருக்கின்ற நிலை மாறி, மிகவும் பாதுகாப்புடன், சுதந்திரமாக செயல்பட்டு, பல சாதனைகளை புரிகின்ற காலமாக நம் ஆட்சிக்காலம் நிச்சயம் இருக்கும்.

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை பின்பற்றி பெங்களூருவில் ஹஜ் பவன் அமைக்க கர்நாடகா முடிவு: இந்திய ஹஜ் அசோசியேஷன் தலைவர் வரவேற்பு

சென்னை, மார்ச்.10

இந்திய ஹஜ் அசோசியேசன் தலைவர் பிரசிடெண்ட் அபூபக்கர் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு அரணாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எத்தகைய திட்டங்களை தீட்டி வருகிறாரோ அதை அப்படியே செயல்படுத்தி இருக்கிறார் கர்நாடக முதல்வர்



சித்தராமையா. நேற்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் கர்நாடக மாநிலம், பெங்களூருவில் ஹஜ் பவன் கட்டப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

தமிழ்நாடு முதல்வர் சிறுபான்மையினர் நலன் காப்பதில் முதல்வர்களின் முதல்வராக இருக்கிறார்.

சிறுபான்மையின மக்களில் ஒருவராக நின்று திட்டங்கள் தீட்டும் முதல்வர் ஸ்டாலின் வழியை காங்கிரஸ் கூட்டணியில் திமுகவோடு அங்கம் வகிக்கிறோம் என்ற தோழமை உணர்வோடு பயணிக்கும் கர்நாடக முதல் அமைச்சரும் பின்பற்றுவது மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் ஏற்படுத்துகிறது.

இரண்டு முதலமைச்சர்களும் ஒரே வழியில் பயணிப்பது நாகரிகமான தொடக்கமாக மாறியிருப்பது நல்லதோர் தொடக்கம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வீட்டில் முடங்கியிருந்த பெண்களை வெளியே வர வைத்தது தி.மு.க. அரசுதான் அமைச்சர் கீதா ஜீவன்

சென்னை, மார்ச். 10

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"மகளிர் மத்தியில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உள்ள நற்பெயரை கண்டு பொறுக்க முடியாமல் எதிர்க்கட்சியினர் நாடகம் போடுகிறார்கள். பெண்கள் பாதுகாப்புக்கு எதிரான ஆட்சி என பச்சை பொய் கூறுகிறார்கள்.



திராவிட மாடல் அரசு பெண்களை ஏமாற்றி விட்டதைப் போல் சில சொல்ல வருகிறார்கள். ஒருவேளை அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம், பெண்களுக்கு சொத்துரிமை, வேலை வாய்ப்பு, காவல்துறையில் பெண்கள், சுய உதவிக்குழு என்றெல்லாம் வீட்டில் முடங்கியிருந்த பெண்களை வெளியே வரவைத்தது, திருமண உதவித் திட்டம் மூலம் பெண்களை படிக்க வைத்தது எல்லாமே தி.மு.க. அரசுதான்.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் வெளியே வராத நிலை இருந்தது. வழக்குப்பதிவு செய்வதற்கே ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய சூழல் இருந்தது. ஆனால் இன்று தமிழகத்தில் பெண்கள் பாதிக்கப்படும்போது தைரியமாக புகார் அளிக்கிறார்கள். அந்த புகார்கள் மீது பாரபட்சமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழகத்தில் மகளிர் காவல் நிலையம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் தடுப்புப்பிரிவு உருவாக்கப்பட்டு, கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது."

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

# ஆயத்த பணிகளை முடித்த கர்நாடகா மேகதாது அணை அமைப்பதற்கான அனுமதியை ரத்துசெய்ய வேண்டும்: ஒன்றிய அரசுக்கு ராமதாஸ் கோரிக்கை

சென்னை, மார்ச். 10

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை: காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைக் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டதாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யா அறிவித்திருக்கிறார். காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பின்படியும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும் கடைமடை பாசன மாநிலமான தமிழ்நாட்டின் ஒப்புதல் இன்றி மேகதாது அணையை கட்ட முடியாது.



மேகதாது அணைக்கான வரைவு திட்ட அறிக்கை தயாரிக்க 2018ம் ஆண்டில் ஒன்றிய அரசு அளித்த அனுமதியை ரத்து செய்வது தான் மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் திட்டத்தை நிரந்தரமாகத் தடுப்பதற்கான ஒரே வழியாகும். அதை ஒன்றிய அரசு உடனடியாக செய்வதுடன், மேகதாது அணை குறித்த எந்த பணியையும் மேற்கொள்ளக் கூடாது என்று கர்நாடக அரசை எச்சரிக்க வேண்டும்.

இன்னொருபுறம் மேகதாது அணைத் திட்டத்தைக் கைவிடுவதாக கர்நாடக அரசு அறிவிக்கும் வரை அம்மாநில அரசுடன் எந்த விதமான உறவையும், ஒத்துழைப்பையும் தமிழக அரசு வைத்துக் கொள்ளக் கூடாது.

மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை குறித்து விவாதிக்க வரும் 22ம் தேதி சென்னையில் தமிழக அரசு கூட்டியுள்ள 7 மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யாவுக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 1.5 பவுன் தங்க செயினை உரியவரிடம் ஒப்படைத்த தூய்மை பணியாளருக்கு குவியும் பாராட்டு

சென்னை, மார்ச். 10

சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு புறநோயாளியாக வந்த பெண் ஒருவர் இன்று தனது ஒன்றரை பவுன் தங்கசெயினைதொலைத்துவிட்டார். தற்போது, தங்கம் விற்கும் விலையில் செயினை இழந்த அவர் மருத்துவமனை முழுவதும் தேடிப்பார்த்தும் செயின் கிடைக்கவில்லை.

இவ்வளவு நோயாளிகள் வந்து செல்லும் இடத்தில் எப்படி தொலைந்த தங்க செயின் எப்படி கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை இழந்த நிலையில், அங்கு துப்புரவு பணியை மேற்கொண்ட மாஜ்மா என்ற பெண்ணின் கண்களில் அந்த செயின் தென்பட்டது. பொன்னைக்கண்டு மயங்காத அந்த பெண், நேர்மையுடன் மருத்துவமனை நிர்வாகத்திடம் அந்த தங்க செயினை ஒப்படைத்தார்.



உலக மகளிர் தின நாளில், இந்த துப்புரவு பெண் தொழிலாளியின் இந்த நேர்மையான செயலை மருத்துவமனை நிர்வாகம் மட்டுமல்ல, அங்கு வந்த எல்லோரும் பாராட்டினார்கள்.

# வேலூர்: அரசினர் பாதுகாப்பு இடத்தில் இருந்து சிறுவன் தப்பியோட்டம்

வேலூர்,, மார்ச். 10

வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் எதிரே காகித பட்டறை சாலையில் தமிழக சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் அரசினர் பாதுகாப்பு இடம் செயல்பட்டு வருகிறது.

குற்றசெயல்களில் ஈடுபட்ட 18 வயதுக்கு கீழ் உள்ள சிறார்கள் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இங்கு தங்கவைப்பட்டிருந்த ஒரு சிறுவன் இன்று நண்பகல் நேரத்தில் தப்பியோடிவிட்டதாக அரசினர் பாதுகாப்பு இடத்தில் இருந்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உடனடியாக வேலூர் டி.எஸ்.பி. பிரித்விராஜ் சவுகான் தலைமையில் 2 தனிப்படைகள் அமைத்து தப்பியோடிய சிறுவனை கண்டறிய வேலூர் எஸ்.பி. மதிவாணன் உத்தரவிட்டுள்ளார்.

தப்பியோடிய சிறுவன் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு அரசினர் பாதுகாப்பு இடத்தில் தங்கவைக்கப்பட்டிருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த புதிய பேருந்து நிலையம், காட்பாடி ஜங்ஷன் உள்ளிட்ட இடங்களில் சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லையில் 17.5 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் ஒருவர் கைது

திருநெல்வேலி, மார்ச்.10

நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் போலீசாருக்கு போதைப்பொருட்கள் விற்பனை குறித்த தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் அப்பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது விக்கிரமசிங்கபுரம் மெயின் ரோட்டின் அருகே சந்தேகப்படும்படியாக நின்றவரை பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில், அவர் சிவந்திபுரத்தை சேர்ந்த சின்னதுரை (வயது 33) என்பதும், அரசால் தடை செய்யப்பட்ட 17 கிலோ 550 கிராம் போதைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து போலீசார் சின்னதுரையை கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்து புகையிலை பொருட்களும் பறிமுதல் செய்தனர்.

# சென்னையில் 128 மெட்ரோ நிலையங்கள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன: மெட்ரோ நிர்வாகம்

சென்னை, மார்ச். 10

சென்னையில் 128 மெட்ரோ நிலையங்கள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்று சென்னை மெட்ரோநிர்வாகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



சென்னை மெட்ரோ ரெயில் கட்டம் I மற்றும் கட்டம் I நீட்டிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்ததை தொடர்ந்து, மெட்ரோ ரெயில் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக இரண்டாம் கட்டத்தில்118.9கி.மீநீளத்திற்கு மேலும் மூன்று வழித்தடங்களில் 128 மெட்ரோ நிலையங்கள் அமைக்கும்பணிகள்முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக, பூந்தமல்லி புறவழிச்சாலை மற்றும் போரூர் சந்திப்புக்கு இடையிலான 624வது மற்றும் இறுதி யுகர்டரின் கட்டுமானப் பணிகள் இன்று வெற்றிகரமாக நிறைவடைந்தன, இதன் மூலம் வழித்தடம் 4ல் பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் போரூர் சந்திப்பு வரையிலான உயர்மட்ட வழித்தடம் அமைக்கும் பணிகள் முடிவடைந்தன.

இந்த இறுதி யுகர்டர் குமணஞ்சாவடி நிலையத்தில் உள்ள SP0405 தூண்களுக்கு இடையே இன்று அதிகாலை 3:30 மணி முதல் 5:30 மணி வரை போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வெற்றிகரமாக நிறுவப்பட்டது. இந்த முக்கியமான நிகழ்வு சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்திருந்ததால் மேலும் சிறப்பாக அமைந்தது. மேலும் இத்திட்டத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றிய பல்வேறு பெண் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் கவுரவிக்கப்பட்டனர் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்புக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்த சாதனையின் மூலம், தாம்பரம் மதுரவாயல் புறவழிச்சாலையில் இதுவரை மொத்தம் 3,202 முன்கூட்டிய தயாரிக்கப்பட்ட கான்கிரீட் உத்திரங்கள் (precast concrete elements) மற்றும் 2 திறந்த வலை உத்திரங்கள் (Open Web Girders), உட்பட 164 இரும்பு விட்டங்கள் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளன. இந்த மைல்கல், பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை தடையற்ற இணைப்பை மேம்படுத்தும் வகையில், வழித்தடம் 4ன் உயர்த்தப்பட்ட மேம்பால கட்டுமானத்தை வேகமாகநிறைவு செய்யும் நடவடிக்கையை ஊக்குவிக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமலாக்கத்துறை சோதனைடாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் கடும் கண்டனம்

சென்னை, மார்ச். 10ρ

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் பெரியசாமி, பொதுச் செயலாளர்தனசேகரன்ஆகியோர் கூட்டாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:




மத்திய பா.ஜனதா அரசு அமலாக்கத்துறை, வருமானவரித்துறை உள்ளிட்ட அரசியலமைப்பு அதிகாரம்பெற்ற அமைப்புகளை பயன்படுத்தி, எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தொடர்ந்து அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது. நாடாளுமன்ற தொகுதிகள் மறுவரையறை, தேசிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு என மத்திய அரசின் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எதிர்த்து வருகிறது. இந்த சூழலில், டாஸ்மாக் அலுவலகத்தில் அமலாக்கத்துறையின் நடவடிக்கை, சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், மில்லியன் வினாக்களை எழுப்புகிறது.

இந்த நிலையில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) தலைமை அலுவலகம், சென்னைமுதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம், மதுபானங்கள் வைப்பு மையம், முன்னாள்மதுவிலக்குஇணை கமிஷனர் வீடு என அரசு அலுவலகங்களில் அமலாக்கத்துறை சோதனையில் ஈடுபட்டு, மிரட்டும் செயலில் ஈடுபட்டதை தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் கடுமையான ஆட்சேபிக்கிறது. வழக்கு தொடர்பான விசாரணை எல்லையை தாண்டி, உயர் அதிகாரிகளையும், பணியாளர்களையும் மன உளைச்சலுக்கும், பதற்றத்துக்கும் ஆளாக்கி வரும் அமலாக்கத்துறையின் அதிகார அத்துமீறலுக்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

# நடுக்கடலில் ரூ.33 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

சென்னை, மார்ச்.10

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து மாலத்தீவு தலைநகர் மாலேவுக்கு இழுவை கப்பல் ஒன்று கடந்த 5ந்தேதி புறப்பட்டது.

இந்த கப்பலில் போதைப்பொருள் இருப்பதாக இந்திய கடலோர காவல் படைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் கடலோர காவல்படை மற்றும் டிஆர்ஐ (வருவாய் புலனாய்வு இயக்குநரகம்) இணைந்து அந்த கப்பலை தடுத்து நிறுத்தியது. பின்னர் கப்பலில் அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது அதில் ரூ.33 கோடி மதிப்புள்ள கஞ்சா எண்ணெய் இருந்தது. போதைப் பொருளை பறிமுதல் செய்த அதிகாரிகள், கப்பலில் இருந்த 11 பேரை கைதுசெய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.


# "வருணன்" படத்தின் 'அச்சுவெல்ல உதட்டால' பாடல் வெளியீடு




தமிழ் சினிமாவில் நடிகர் தனுஷ் நடித்த 3 படத்தில் கதாநாயகியின்தங்கையாகநடித்துநடிகையாகஅறிமுகமானார் கேப்ரியல்லா. குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்த கேப்ரியல்லா, ஜோடி நம்பர் 1 நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்து கொண்டு பிரபலமானார். அதன்பின் பிக்பாஸ் 4 சீசனில் போட்டியாளராக கலந்து கொண்டார். அதன்பின் பிக்பாஸ் ஜோடிகள் நிகழ்ச்சியில் கலந்து ரன்னர்அப் இடத்தை பிடித்தார்.

தற்போது இவர் துஷ்யந்த் ஜெயபிரகாஷுடன் இணைந்து நடித்துள்ள திரைப்படம் வருணன். இப்படத்தை யாக்கை பிலிம்ஸ் தயாரிப்பில் ஜெயவேல்முருகன் இயக்கியுள்ளார். படத்தில் ராதா ரவி, சரண்ராஜ், ஷங்கர்நாக் விஜயன், ஹரிபிரியா, ஜீவா ரவி, மகேஷ்வரி மற்றும் பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்/ படத்தின் இசையை போபோ சாஷி மேற்கொண்டுள்ளார். ஒளிப்பதிவை ஸ்ரீராம சந்தோஷ் மேற்கொண்டுள்ளார். இப்படம் வருகிற 14ந் தேதி வெளியாக உள்ளது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது. இந்நிலையில் 'வருணன்' படத்தின் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. 'அச்சுவெல்ல உதட்டால' எனத்தொடங்கும் பாடல் வெளியாகியுள்ளது.

# உலகின் முதல் வீரர்... ரோகித்துக்காக காத்திருக்கும் வரலாற்று சாதனை?



துபாய் சர்வதேச ஸ்டேடியத்தில் ரோகித் 421 ரன்கள் எடுத்திருக்கிறார். இறுதி போட்டியில் அவர் 79 ரன்கள் எடுக்கும் பட்சத்தில், இந்த ஸ்டேடியத்தில் ஒரு நாள் சர்வதேச போட்டியில் 500 ரன்களை எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைப்பார்.

இதுதவிர, போட்டியில் வெறும் 4 ரன்களை எடுத்து விட்டால், ஸ்காட்லாந்தின் ரிச்சி பெர்ரிங்டனை முந்தி, ஒரு நாள் சர்வதேச போட்டியில் அதிக ரன்களை எடுத்த வீரர் என்ற பெருமையையும் பெறுவார்.

சாம்பியன்ஸ் டிராபி இறுதி போட்டிக்குதகுதி பெற்றதன்மூலம், ஏற்கெனவே ஐ.சி.சி.யின் அனைத்து வகையான போட்டி தொடரின் இறுதி போட்டிக்கும் அணியை அழைத்து சென்ற முதல் கேப்டன் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றுள்ளார்.

இறுதி போட்டிக்கு பின்னர், ஒரு நாள் சர்வதேச போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிக்கான கேப்டனாக தொடர்ந்து ரோகித் நீடிப்பாரா? என்பது பற்றி பி.சி.சி.ஐ. முடிவு செய்யும் என கூறப்படுகிறது. 2027 ம் ஆண்டுக்கான ஒரு நாள் சர்வதேச போட்டிக்கான உலக கோப்பை தொடருக்கு நிலையான தலைமை வேண்டும் என பி.சி.சி.ஐ. எதிர்பார்க்கிறது.

ரோகித்தோ, தன்னிடம் இன்னும் கிரிக்கெட் கொஞ்சம் மீதமிருக்கிறது என நம்புகிறார். அதனால், அவர் ஓய்வு பெறமாட்டார் என தகவல் தெரிவிக்கின்றது. எனினும், இறுதி போட்டிக்கு பின்னர் தொடர்ந்து அவர் கேப்டனாக நீடிப்பாரா என்பது இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது.

இந்த செய்தியையும் படிங்க: கிரிக்கெட் போட்டிகளில் எந்த கேப்டனும் செய்யாத சாதனையை படைத்த ரோகித் சர்மா

# விஜய்யின் ஜன நாயகன் படப்பிடிப்பு அப்டேட்




வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான 'தி கோட்' திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்கும் படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 69' என்று பெயரிடப்பட்டது. இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, கவுதம் வாசுதேவ் மேனன், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, நரேன் ஆகியோர் நடிக்கின்றனர். இந்தப் படம் விஜய் நடிக்கும் கடைசி படமாகும். இப்படத்தை எச்.வினோத் இயக்க அனிருத் இசையமைக்கிறார். பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் தயாரிக்கும் இப்படம் வருகிற அக்டோபர் மாதம் வெளியாகவுள்ளது. 'அனிமல் மற்றும் கங்குவா' படத்தில் வில்லனாக நடித்து அசத்திய பாபி தியோல் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்த படமானது அரசியல் தொடர்பான கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி வருவதாக கூறப்படுகிறது. குடியரசு தினத்தை முன்னிட்டு 'தளபதி 69' படத்தின் பர்ஸ்ட் லுக்குடன் பெயரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, எச். வினோத் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்திற்கு 'ஜன நாயகன்' என பெயர் வைக்கப்பட்டுள்ளது. படத்தின் பர்ஸ்ட் லுக் இணையத்தில் வைரலானது. அந்த போஸ்டரில் விஜய் வாகனத்தின் மீது நின்று கொண்டு அவரது ரசிகர்களுடன் செல்பி எடுப்பது போல் காட்சி அமைந்துள்ளது.

அரசியல்வாதியாக மாறியுள்ள விஜயின் கடைசி படம் இது என்பதால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு மிகப்பெரிய அளவில் இருந்து வருகிறது. அதன்படி இந்த படத்தின் படப்பிடிப்புகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் இந்த படத்தின் ஒட்டுமொத்த படபிடிப்பும் 2025 மே மாதத்திற்குள் நிறைவடைந்து விடும் என தகவல் வெளியானது. ஆனால் தற்போது கிடைத்த தகவலின்படி நடிகர் விஜய் அரசியலிலும் பிஸியாக இருப்பதால் 'ஜனநாயகன்' படத்தின் படப்பிடிப்பு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவடையும் என அப்டேட் வெளிவந்துள்ளது.

அடுத்தது இந்த படம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் போது இப்படம் அக்டோபர் மாதத்தில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்படத்தை 2026 பொங்கல் தினத்தில் திரைக்கு கொண்டு வர படக்குழு திட்டமிட்டு வருவதாக சொல்லப்படுகிறது. இனிவரும் நாட்களில் மற்ற அப்டேட்டுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாம்பியன்ஸ் டிராபி இறுதிப்போட்டி: மெரினா, பெசண்ட் நகர் கடற்கரைகளில் நேரடி ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு



பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடைபெற்று வந்த 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. 8 அணிகள் பங்கேற்றிருந்த இந்த தொடரின் லீக் மற்றும் அரையிறுதி சுற்றுகளின் முடிவில் இந்தியா நியூசிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளன. இறுதிப்போட்டி நாளை நடைபெற உள்ளது.

இந்நிலையில், இந்தியா நியூசிலாந்து மோதும் இந்த போட்டி தமிழகத்தின்மெரினா, பெசன்ட்நகர்கடற்கரைகளில்நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.மெரினாவில்விவேகானந்தர்நினைவுஇல்லத்திற்கு எதிரிலும், பெசன்ட் நகரில் போலீஸ் பூத் அருகிலும் நேரடியாக ஒளிபரப்ப தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

# பரத்தின் காளிதாஸ் 2 பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு




'பாய்ஸ்' படத்தில் டீன் ஏஜ் இளைஞனாக ஸ்டைலிஷ் ஆங்கிலம் பேசியபடி நடித்து கவனம் ஈர்த்தவர் பரத். 'காதல்' படத்தின் மூலம் மக்களின் மனதில் இடம் பிடித்தார்.

கடந்த 2019ம் ஆண்டு பரத் 'காளிதாஸ்' என்ற திரில்லர் படத்தில் நடித்து இருந்தார். போலீஸ் அதிகாரியாக நடித்த அந்தப்படம் மக்களிடையே நேர்மறையான விமர்சனங்களைப் பெற்றது. அந்தப்படத்தினை ஸ்ரீ செந்தில் இயக்கினார். அப்படத்தில் ஆன் ஷீத்தல், சுரேஷ் மேனன் மற்றும் ஆதவ் கண்ணதாசன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்தனர். தற்போது, இதன் 2ம் பாகம் உருவாகி வருகிறது. இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைக்கிறார். சுரேஷ் பாலா ஒளிப்பதிவும், புவன் சீனிவாசன் படத்தொகுப்பும் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில்,'காளிதாஸ்2'படத்தின்பர்ஸ்ட்லுக்போஸ்டரைவிஜய்சேதுபதிவெளியிட்டுள்ளார்.கோடைவிடுமுறையில் படம் வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# விராட் கோலிக்கு காலில் காயம்; இறுதி போட்டியில் பங்கேற்பாரா...? பயிற்சி ஊழியர் பதில்



ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதி போட்டி இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு துபாயில் நடைபெறுகிறது. இதில், இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் விளையாடுகின்றன.

இதற்காக இரு அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த போட்டிக்கு முன்பு, இந்தியாவின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலிக்கு பயிற்சியின்போது கால் மூட்டு பகுதியில் காயம் ஏற்பட்டு உள்ளது. பேட்டிங் பயிற்சி செய்து கொண்டிருந்தபோது, வேகப்பந்து வீச்சாளர் வீசிய பந்து ஒன்று தாக்கியதில் கடுமையான வலி ஏற்பட்டு உள்ளது.

இதனால், உடனடியாக அவர் பயிற்சியை நிறுத்தினார். மருத்துவர் ஒருவர் உடனடியாக அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து தேற்றினார். காயம் ஏற்பட்ட பகுதியில் மருந்து தடவி, பேண்டேஜ் போடப்பட்டது.

இதன்பின்னர், பேட்டிங் பயிற்சியில் கோலி ஈடுபடவில்லை. இதுபற்றி இந்திய அணியின் பயிற்சி ஊழியர் ஒருவர் கூறும்போது, அந்த காயம் அவ்வளவு தீவிரம் வாய்ந்ததல்ல. இறுதி போட்டியில் கோலி விளையாடுவார் என கூறினார்.

ரன் இலக்கை அடைவதற்காக ஆடும் விளையாட்டில் (சேசிங்) விராட் கோலியின் அபார திறமையை பார்ப்பதற்காக ரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டுவதுண்டு. அதிலும், போட்டியில் வெற்றி பெறும்போது ரசிகர்கள் உற்சாக மிகுதியால் ஆர்ப்பரிப்பார்கள்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதி போட்டி துபாயில் நடந்தபோது, விராட் கோலி சேசிங்கிற்காக, 84 ரன்கள் எடுத்து அதிரடியாக ஆடி அணியை வெற்றிக்கு அழைத்து சென்றார். இதனை அவருடைய ரசிகர்கள் வரவேற்றனர். இந்த சூழலில், இறுதி போட்டியில் அவருடைய ஆட்டம் எப்படி இருக்கும் என ரசிகர்கள் ஆவலாக காத்திருக்கின்றனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.